ஏப்ரல் 2012-1 இது ஒரு மாத இதழ் விலை ரூபா 100/=


# தின மகுடி




நம்பிக்கைக்கு ஒரு நட்சத்திரம்

யிறிடிப்பும் கடித்தழுப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தின மகுடி

## உங்களோடு

## ஒரு அறிமுகம்

உங்கள் கரங்களில்

இசைக்கருவி ஒன்றின் பெயரில் ஒரு சஞ்சிகை!

தினமும் நிகழ்ந்தேறும் பல்வேறு தகவல் களை ஒன்றிணைத்து மாதாந்தம் வழங்கும் முயற்சி இது.

மகுடி என்பது பாம்பை ஆட வைக்கும் கரு வியாச்சே இந்தப் பெயர் எப்படி?

நீங்கள் யோசிப்பது புரிகிறது.

'அருவாயும் உருவாயும் அந்தியாயும்

அந்தமாயும் ஒளியாயும் ஆகமாமயும்

திருவாயும் குருவாயும் சீவனாயும்

செறிந்த வாஸ்துவை போற்றியாடு பாம்பே'

என்ற சித்தர் பாடலும்

'ஆட்டிவித்தால் யாரோருவர் ஆடாதாரோ கண்ணா

ஆசை என்னும் தொட்டிலிலே ஆடாதாரே கண்ணா'

என்ற கவியரசரின் வரிகளும் பதில் கூறும் என நம்புகிறோம்.

உலக, இலங்கை தமிழ் படைப்பாளிகளின் கூட்டு முயற்சியாக மலரும் இந்தச் சஞ்சிகை யில் உங்கள் சொந்தமும் உறவுகொண்டாட தொடர்பு கொள்ளுங்கள்.

**ஆசிரிய பீடம் தினமகுடி**

**இல. 238, கடற்கரை வீதி,**

**கொழும்பு - 11**

**தொலைபேசி: 011 3137921**

# நம்பிக்கைக்கு ஒரு நட்சத்திரம்



தலைநகரில் கடந்த 5 ஆண்டுகளாக இயங்கிவரும் நவோதயம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் மேம்பாட்டுக்குச் சிறப்பான பணிகளை செய்து வரும் எஸ்.கே.கிருஷ்ணா, இந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார்.

தலைநகரிலுள்ள தமிழ் பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களின் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்காக நவோதயம் அமைப்பு மேற்கொள்ளும் பணிகள் வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் உரியனவாகும். இது மட்டுமின்றி இத்தகைய மக்களது வாழ்வியல் மேம்பாட்டுக்காக இவர்கள் மேற்கொள்ளும் உதவிகள் காலத்தால் நிலைத்து நிற்கக்கூடியன.

'தன்னலம் சிறிதும் இல்லாது சமூகத்தை நேசிப்பவர்களும், பசியால் வாடுகின்ற மக்களை நோக்கி நீளுகின்ற கைகளை உடையவர்களுமே இப்போது உலகத்திற்கு தேவைப்படுகின்றார்கள்'' 'எவனுடைய இதயம் ஏழைகளுக்காக ரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன்: மற்றவர்கள் துராத்மாக்கள்'' என்றார் சுவாமி விவேகானந்தர்

அவரது இந்த வாக்குக்கு ஏற்ப இன்று தனது பணிகளை முன்னேடுத்து வருகிறார் எஸ்.கே. கிருஷ்ணா என்றால் அது மிகையல்ல.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் ஆதரவுத்தளம் இருப்பது அவசியமாகின்றது. இந்த வகையில் நவோதயம் இளைஞர் அமைப்பு தனது பணிகளைத் தொடர்ந்து முன்னேடுப்பதற்கு ஆதரவுத்தளமாக அரசியல்சக்தியை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

**ஆக்கம்: சக்திவேல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஒரே நாடு ஒரே மக்கள்

உலகில் தலைசிறந்த மாவீரர்களில் ஒருவரான நெப்போலியன் கூறிய வாசகங்கள் உலகப் புகழ் பெற்றவை. அவர் ஆயுதங்கள் பற்றிக் கூறுகையில்,

'நான் ஆயுதம் ஏந்தாது இருக்கின்ற வேளையில் ஆயுதம் ஏந்திய ஆயிரம் வீரர்கள் என் முன்னால் வந்தாலும் பயப்படமாட்டேன். ஆனால்,நான் ஆயுதம் ஏந்தியிருக்கும் நேரம் பேனாவுடன் என் முன்னால் வருபவனைக் கண்டு பயப்படுகிறேன்'- என்றார்.

இவ்வாறு போனாவின் சக்திகுறித்து பல்வேறு பெருமைகள் இருக்கின்றன இந்த போனாவை பாவிப்போர் உண்மையின் அடையாளமாக - நேர்மையின் சின்னமாக - நியாயத்தின் அவ தாரமாக இருக்கவேண்டும் என்பதே பொதுவான விதியாகும்.

இன்று நம் நாட்டில் இந்த போனாவைப் பாவிப் போரில் ஒரு சிலர் உண்மையையும் நியாயத் தையும் புறந்தள்ளிவிட்டு தத்தமது விருப்புக்கும் தயவுக்கும் அதனைப் பயன்படுத்துபவர்களாக உள்ளனர்.

இவ்வாறானவர்கள் இன்று எமது ஜனாதிபதி குறித்தும் பல்வேறு கருத்துகளை முன் வைத்து வருகின்றனர். அவற்றில் எத்தனை உண்மையா னவை,நேர்மையானவை, நியாயமானவை என்பது அவர்களது மனச்சாட்சிக்குத் தெரிந்தவையே.

நாடு இன்று அமைதி பூங்காவாக மாற, மெல்ல மெல்ல அடி எடுத்து வைக்கிறது இந்த நிலைமை

ஏற்பட பிரதான காரணகர்த்தாவாக இருந்தவர், இருப்பவர் யார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நாட்டில் கடந்த 64 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடி வருகின்றனர். இந்தப்போராட்டம் சாத்வீகப் போராட்டமாக உருவாகி ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்து இன்று அடக்கப்பட்டிருக்கிறது.

காலங்காலமாக இந்தப் போராட்டத்தை வெற்றிகொள்வதற்காகத் தமிழர்தரப்பு செய்துள்ள தியாகங்கள் சொல்லில் அடங்காதவை. இந் நிலையில் இன்று தமிழர்தரப்புக்கு அவசியமாகத் தேவைப்படுவது அறிவுப்புரட்சியாகும்.

இந்தப் புரட்சியை தமிழர் தரப்பு தொடங்க வேண்டுமானால் முதலில் கடந்த கால அனுபவங்களை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் அத்தோடு சமகால யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சமகாலத்தை புரிந்து கொள்ளவேண்டுமெனில் நம்மை ஆண்டு கொண்டிருக்கின்ற ஜனாதிபதியையும் அரசையும் நாம் கவனத்தில் கொண்டேயாக வேண்டும். 'ஒருநாடு ஒரே மக்கள்' என்ற புதிய சித்தாந்தத்துடன் இந் நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகான முற்படும் ஜனாதிபதியின் எண்ணங்களை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டு இதற்கான சாதகமான வழிகளில் எமது அபிலாஷ'களை பெற்றெடுப்பதற்கான திட்டமிடல்களை மேற் கொள்ள வேண்டும்.

சுதந்தரத்திற்குப் பின்னர் தமிழ்மக்கள் தமது உரிமை குறித்து முன்னேடுத்துவந்த போராட்டங்கள் பல்வேறு ஒப்பந்தங்கள் ஊடாக ஒப்புதல் காணப்பட்டு பின்னர் கிழித்து எறியப்பட்டன என்பது கடந்த கால வரலாறாகும். இவ்வாறானதொரு நிலைமை அன்றைய ஆட்சியாளர்களுக்கு ஏற்படக் காரணமாகவிருந்த அடிப்படைக்காரணிகள் குறித்து நாம் ஆராய முற்படின் அதற்கு மூலகாரண கர்த்தாக்கள் எம்மை ஆண்ட பிரித்தானியரே.

பெரும்பான்மையினராகவிருந்த சிங்கள மக்களைவிட்டுவிட்டு சிறுபான்மையினரான தமிழர்களை அவர்கள் தமது ஆட்சிநிர்வாகத்தின் முக்கிய பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டமையே தமிழ்மக்களுக்கும் சிங்களமக்களுக்குமிடையில் வேறுபாடுகளும் பேதங்களும் எற்படக் காரணமாயிற்று இதுவே இனமுரண்பாட்டுக்கும் புரிந்துணர்வுக்கும் கால்கோலாகியது. இதன் வெளிப்பாடுகளே தமிழ் மக்களின் உரிமைகள் குறித்த விடயங்களில் மேலோங்கி நின்றன - நிற்கின்றன.

இத்தகைய நிலையிலே நமது ஜனாதிபிதி சற்று வித்தியாசமான யோசனையை முன்வைத்து அதனூடாக துருவாமாகி நிற்கும் இனங்களை இணைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இதுவே 'ஒருநாடு ஓரே மக்கள்' என்ற அவரது சிந்தனையாகும்.

இன்றைய நிலையில் தமிழ்மக்களாகிய நாம் இந்த சிந்தனையை உள்வாங்கி அதனூடாக எமது அபிலாஷ'களை வென்றெடுககும் அறிவு புரட்சிக்கு வித்திட வேண்டும். இதற்காக நாம் முதலில் செய்ய வேண்டியது ஜனாதிபதியின் காரங்களை பலப்படுத்தி இன ஒற்றுமையை வளப்படுத்த வேண்டும்.

**எங்கே இதற்கு நாம் தயாராவோமா?**

**-பி.ஜி.ஆர்**





# JOKE

**மனைவி:** மழை வர்ற மாதிரி இருக்கு! மொட்டை மாடில காயற துணியையெல்லாம் எடுத்துட்டு வாங்க.. ஓடுங்க!

**கணவன்** வந்ததும் போறேனேடி......

**மனைவி:** யாரு வந்ததும்?.....துணி எடுக்க பக்கத்து வீட்டுக்குட்டி அவ மாடிக்கு வந்ததுமா?

---

**நர்ஸ்:** ஆபரேஷன் தியேட்டர்ல வந்துகூட எதுக்கு டாக்டர் என்னை சில்மிஷம் பண்றீங்க?

**டாக்டர்:** புரியாமல் பேசாதே.. பேஷண்ட்டுக்கு மயக்க மருந்து வேலை செய்யிதான்னு உன் மூலமா டெஸ்ட் பண்ணினேன் அவ்வளவுதான்.

---

**நிருபர்:** உங்க வருங் காலக் கணவர் எப்படி இருக்கணும்னு நினைக்கிறீங்க?

**நடிகை:** நிகழ்காலக் கணவரை விட நல்ல வரா இருக்கணும்னு தான்.

---

**உமா:** ஆபீசுக்கு போகும் போது உன் கணவர் குட்நைட்ன்னு சொல்லிட்டுப் போறாரே...எதுக்கு?

**ரமா:** அங்க தூங்கத் தானே போறார்.

---

**ஒருவர்:** அந்த நடிகர் ஏன் எப்பவும் கோல்ட் செயின கடிச்சிக்கிட்டே இருக்காரு?

**மற்றவர்:** அவரு நகைச்சுவை நடிகர் இல்லையா.

---

**ஒருவன்:** நேத்து உன் மனைவிக்கும் உன் அம்மாவுக்கும் நடந்த சண்டைல யாருக்கு பின்னாடி நீ நின்ன?

**மற்றவன்:** போடா நான் பத்திரமா பீரோ பின்னாடி போய் நின்னுக்கிட்டேன்.

---

**ஒருவன்:** கல்லறையின் முன்னால்... நீ செத்திருக்கவே கூடாது. நீ செத்ததனால் நான் எவ்வளவு கொடிய துன்பங்கள் அனுபவிக்கிறேன் தெரியுமா? என் வாழ்க்கையே நரகமாகி விட்டது. நீ சாகாமல் இருந்திருக்கக் கூடாதா?

**அங்கு வந்த ஒருவர் :** இறந்து போனவர் உன் தந்தையா?

**ஒருவன்:** இல்லை

**அங்கு வந்தவர்:** மகனா? .


**ஒருவன்:** இல்லை இல்லை

**அங்கு வந்தவர்:** தந்தையும் இல்லை மகனும் இல்லை என்கிறாய். எதற்காக இப்படி அழுது புலம்புகிறாய்? அவர் உனக்கு என்ன

**ஒருவன்:** இறந்து போன இவர் என் மனைவியின் முதல் கணவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரத்துப்போகுமா மனிதாபிமானம்?

இரவு மணி ஒன்று... விழிகளில் சொட்டுத் தூக்கமின்றி ஈஸிச்சேரில் சாய்ந்திருந்தார் நாதன்.

மனசு மொத்தமும் கனமாயிருந்தது. மாடியறையில்...தொடர் இருமல், கடுமையான அனத்தல், கொஞ்சமும் முடியாமையின் வெளிப்பாடு...

அய்யோ ஏதாவது கொடேன்... ஈசானமான கெஞ்சல்

டானிக், தண்ணீர் ஊற்றிக் கொடுக்கும் சத்தம்னாலும் குறையாத இருமல். எதுவுமே நாதனை அசைத்துப் பார்க்க வில்லை இருட்டின் பிடியிலிருந்து இரவும் மீண்டு கொண்டது காலை தினசரியை பிரித்த நாதனுக்கு அந்தச் செய்தி அதிர்ச்சி தந்தது.. .

ஆம்..முப்பத்தாறு வருடங்களாகச் செயலற்று படுத்த படுக்கையாக கிடக்கும் பெண்ணுக்கு அவளது கனவன் கட்டாய மரணம் கொடுக்க நினைப்பதா..! அதற்கு ஒரு வழக்கா..? முதல் கட்டமாக வற் புறுத்தி உணவு ஊட்டக் கூடாது என ஒரு கோரிக்கை வேறு... இது எப்படி சாத் தியம்.

மனித உயிர் பொருட்டில்லாமல் போனதா? இல்லை அவஸ்தையில் துடிக்கும் ஜீவனை அமைதிப்படுத்தி விடலாமென்ற காந்தியம் வெற்றுப் பொருளாகிப் போனதா?

சார்... குரல் கேட்டு நிமிர்ந்தார்.பதட்டத்துடன், மாலா.

என்னம்மா என்பதாக ஏறிட்டார், நாதன்.

அம்மாவ வந்து பாருங்களேன் ரொம்ப சிரமப்படுறாங்க எனக்கே ஒரு மாதிரியா இருக்கு சார்.

ம்...நோயாளிகளைக் கவனித்துக் கவனித்து அந்த வலி. துடிப்பு எல்லாம் மறத்துப் போன உனக்கே இப்படினா...முப்பது வருஷமா மனைவியோட ஈடில்லா இணையாக வாழ்ந்த எனக்கு எப்படியிருக்கும்? ஒருநீண்ட பெருமூச்சை வெளியிட்டு எழுந்தார்.

நர்ஸ் மாலா பின்னால் எந்திரத்தனமாக படியேறினார்

உண்மைதான் அவஸ்தையில்தான் கிடந்தாள் சுந்தரி. பார்த்த மாத்திரத்தில் தீப்பட்ட புண் ஆனர் நாதன்.

சட்டென கண்ணீர் கசிய ஆரம்பித்தது. தூக்க மாத்திரை கொடுத்தியாமா கேட்டார்.

வழக்கத்தை விட ஒன்னு அதிகமா தந்துட்டேன் சார் இதை நர்ஸ் சொல்லும் போதே கணவனின் கரத்தை இறுக்கிப் பற்றிய சுந்தரி கூட நாலு மாத்திரைய சேர்த்துக் கொடுக்கச் சொல்லுங்களேன்...நிம்மதியாப் போய்ச் சேந்துடுறேன். என்றாள் முணங்கியபடியே.

மனைவியின் தலையை ஆதரவோடு நீவிக்கொடுத்த நாதன் சிரமப்பட்டு அழுகை அடக்கியதும் மாலா இன்னொன்னு கொடும்மா நர்ஸ் கொஞ்சம் தயங்க டாக்டர்ட்ட நான் சொல்லிக்கிறேன் என்றார்.

நாதன்,சுந்தரியை தன்னவளாக்கிக் கொண்ட போது ஆதரவாய் நின்றவர்கள், தத்தமது அலுவலக நண்பர்கள்தான். காதல் திருமணம்...இரு வீட்டார் எதிர்ப்பையும் மீறி இது நடந்தது. உள்ளூரிலேயே இருந்தால் தேவையில்லாத பிரச்சினைகள் வருமென நிறைய யோசித்து, உடனே வெளியூர் கிளைக்கு மாற்றல் வாங்கிப் போய் சந்தோஷமாகத்தான் வாழத் தொடங்கினார் கள்... நாட்களின் நகர்வு கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்கு வருத்தத்தைத் தர ஆரம்பித்தது!



குழந்தையின் வரவு இல்லாது போனதுதான் காரணம். அவர்களும் மருத்துவத்தை தவிர்த்து ஊர் ஊராகப்போய்க் குளம் மூழ்கினார்கள், கோயில் சுற்றினார்கள்... எந்தப் பயனுமில்லை.

நண்பர்களோ மருத்துவத்துல எவ்வளவோ இருக்கு ரெண்டு பேரும் செக்கப்புக்கு போங்க என்றனர் .

நாதனுக்கும் சரி சுந்தரிக்கும் சரி அதிலே கடுகளவும் உடன்பாடில்லை. குறையென்பது யாரிடமிருந்தாலும் அது மனசுகளை கீறிப் போட்டுவிடும் என பயந்தார்கள்.

அந்நியோன்யத்தில் சொட்டுச்சொட்டாய் இனம் புரியாத அமிலம் விழும் முகம் கொடுத்து பேசுவதைக் கூட மாயத்திரை மறைத்து விடும். சாதாரண வார்த்தையிலும் இடைவெளியிருப்பதாக தெரியும்.கலந்து பேசினார்கள்.

நமக்கான பாத்திரம் இது, இதிலே இப்படித்தான் நடிக்க வேண்டுமென்பது விதியென நாளடைவில் உனக்கு நான் பிள்ளை எனக்கு நீ பிள்ளை யென சராசரியாகிப் போனார்கள் .

நிறைய ஒட்டுதலாக இருப்பார்கள் இருவரும். அப்பகுதியில் உள்ளவர்கள் பார்த்துப் பார்த்து உச் கொட்டுவார்கள். யார் கண்பட்டதோ... சின்னதாக வந்த இருமல், படிப்படியாக மூச்சுத் திணறலாக மாறியது! வைத்தியம் எதுவுக்கும் கட்டுப்படவில்லை.

நோயின் மொத்தமும் சுந்தரியை சூழ்ந்தது. உணவுக்கு ஈடாக மருந்து,மாத்திரையும் தொடர்ந்தது.

முதல் முறையாக உறவுகளற்ற தனிமையை நினைத்து இருவரும் கட்டிக்கொண்டு அழுதனர். தேம்பித்தேம்பி அழுதனர்.

திருமணத்தின் போது துணையாக இருந்த அத்தனை நண்பர்களும் வந்து ஏதேதோ ஆறுதல் கூறிப பார்த்தார்கள்... ஆனாலும் அழுதனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையை ராஜினாமா செய்தாள்...வந்த பணத்தை மாதம் வருமானம் வரும்படியாக வங்கியில் டெபாஷிட் செய்தனர். டாக்டரின் ஆலோசனைப்படி ஒருநர்ஸ் வந்து வீட்டிலேயே கவனித்துக் கொள்ளவும் ஏற்பாடு செய்து கொண்டனர்.

நாட்கள் உருண்டன... மனைவியை நினைத்து நிறைய வருந்தினார். சுந்தரியோ தன்னால் கணவனுக்கு முழுமை கொடுக்க முடியவில்லையே என உருகினாள்.

கழுத்தில் தாலி ஏறிய நாளிலிருந்து ஒரு பதுமையாக வைத்து அழகு வார்த்தாரே...அவர் இன்று...

கணவனின் அரவணைப்பில் அப்படியே மெல்லமாய் அசந்தாள்.

போர்வையைக் கழுத்து வரை போர்த்தி விட்டு உஸ் அப்பாடா என்பது போல் திரும்பி மொத்தமாய் மாலாவைப் பார்த்தார் நாதன்.

என்ன சார் மாடிக்கு கூட்டியாந்து ரொம்ப கஷ்டப்படுத்திட்டேனோ. என்னிக்குமில்லாம அதிகமா துடிச்சாங்க அதான் மனசு கேட்கல கீழ வந்தேன். தப்புனா மன்னிச்சுருங்க

காலையிலயிருந்தே இருமறதுக்கும் மூச்சுவிடவும் சுந்தரி சிரமப்பட்டா அதனாலதான் ராத்திரி இங்கேயே தங்கும்மானு உன்னிடம் சொன்னேன்.

சார் கேட்கறேனு தப்பா நினைக்கவேண்டாம்...ஒரு மாதிரியா இருக்கிறீங்களா ஏன்னு தெரிஞ்சுக்கலாம?

டாக்டர் கூறியிருக்கார் மாலா வெளிப் படையானவள் என்று. அதான் கேட்க வேண்டும் என நினைத்ததை துணிந்து கேட்டு விட்டாள்.

மனைவி நன்றாக தூங்குகிறாளா என்று குனிந்துப் பார்த்து உறுதிபடுத்தியதும் அப்படியெல்லாம் இல்லம்மா... என்றார்.

அவர் சமாளிக்கிறார் என்பதை புரிந்துகொண்டு நீங்க பொய் சொல்றீங்க சார்.

காலையில பேப்பருல வந்த செய்திய நானும் படிச்சேன கொடுமையான வேதனை கூட ஒரு வகையில் சித்ரவதைதான். அதை அமைதிப்படுத்தி விடலாமுனு நினைக்கிறது எந்த வகையிலும் தப்பு கிடையாது.

என்னம்மா சொல்ல வர்ற... சின்னதாக அதிர்ந்து தான் போனார். எதனாலோ உள்ளுக்குள் படபடப்பு...

இன்னைக்கிருக்கற துரிதத்துல... அவளை மேலும் தொடர விடாது சைகைகாட்டி நிறுத்தியவர், நீ என்ன சொல்லவாறேன்னு தெளிவாத் தெரியுது அந்தளவு இரக்கமில்லாதவனா நான்... என்றார் கடுமையாக.

சார் நான் சொல்லவந்ததை தப்பாப் புரிஞ்சுட்டீங்க பதறினாள்.

நீ கல்யாணமாகாத சின்னப்பொண்ணு பக்குவம் போதாது. உண்மையான கணவன், மனைவி உறவுங்கறது எந்த சந்தர்ப்பத்துலேயும் விட்டுக் கொடுக்காம இணையா இருக்கறதுதான்.

அதுவுமில்லாம என்னையே முழுமையா நம்பி வந்தவ இந்த சுந்தரி அவளோட அவஸ்தை பார்க்க சகிக்கலதான். இருந்தாலும் அவளுக்குக் கடைசி வரைக்கும் பணிவிடை செய்வது என்னோட கடமை.

நாதனின் வார்த்தைகளில் மனைவியின் மேல் தான் கொண்டிருக்கும் அழுத்தமான அன்பைக் காட்டியது.

உண்மையாக சொல்ல வேண்டுமானால் அந்தச் செய்தியையும், இந்த அம்மாவையும் சேர்த்து சராசரியாக யூகித்தது தவறுதான். மனிதர்களிடம் நேயம் குறைந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும் நாதனைப் போன்றவர்கள் இருக்கப் போய்தான் மனிதாபிமானமென்பது மிச்சமுள்ளது.

தன்னைத்தானே நொந்து கொண்ட மாலா. சார்...மன்னிக்கனும் ஏதோ தெரியாத்தனமா... உங்களோட உயர்ந்த எண்ணத்த சராசரியா நெனச்சுட்டேன். உங்களோட இந்த பற்றுதலுக்காகவாது அம்மா சீக்கிரமா குணமாகட்டும். அதுக்காக... அவள் தயங்கினாள், எங்கே தன் வேலைக்கு பங்கம் வந்து விடுமோ என்று.

அதைப் புரிந்து கொண்டு, நீ எப்பவும் போல வந்து போகலாம் நாதனின் வார்த்தையில் கடுகளவும் கோபமில்லையெனத் தெரியவும் சுந்தரியை உற்றுப்பார்த்தாள் அவளோ நல்ல தூக்கத்திலிருந்தாள்.

சார் நீங்க போய்ப் படுங்க நான் பார்த்துக்கிறேன் மாலா இதைக்கூறவும் சின்னதான பெருமூச்சொன்றை வெளிப்படுத்தியபடி தன் அறையை நோக்கி படிகளில் இறங்கினார் நாதன்.

**ஆக்கம்**

**மீனா இங்கிலாந்து**





# 18ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட தொலைநோக்கி

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் பகுதியில் 18ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட தொலைநோக்கிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

இப்பகுதியில் மொத்தம் 5 தொலைநோக்கிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை நிலம் மற்றும் கடலில் பொருள்களைக் கண்டுபிடிக்க மக்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.



இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, இவை அனைத்தும் 3 அங்குலம் முதல் 5 அங்குல நீளம் உடையதாக இருந்தன. இந்த தொலைநோக்கிகள் அனைத்தும் பசுமாட்டின் எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளன. வர்த்தகத்தில் ஆம்ஸ்டர்டாம் மிகவும் பிரபலமாக விளங்கிய காலத்தில் இவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

ஒவ்வொரு தொலைநோக்கியிலும் இரண்டு லென்ஸ்கள் உள்ளதால் கலிலியோ பயன்படுத்திய தொலைநோக்கி அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கலாம் என தெரிகிறது.

ஒரு முனையில் குவி ஆடியும் மற்றொருபுறம் குழி ஆடியும் இடம்பெற்றிருந்தன. நகரும் வகையில் சுழல் மறை போடப்பட்டு திருகும் அமைக்கப்பட்டிருந்தன.

ஒபரா நடனங்களை மிக அருகில் பார்ப்பதற்கு வசதியாக இத்தகைய தொலைநோக்கிகளை செல்வந்தர்கள் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த ஐ.பி.எல்., தொடரின் பைனலுக்கான தகுதிசுற்றில், தோல்வியடைந்து வெளியேறிய எங்களுக்கு, சாம்பியன்ஸ் லீக் கோப்பை வென்றது மறக்க முடியாதது. இந்த ஆண்டும் வெற்றி நடையை தொடர்ந்து, முதன் முதலாக ஐ.பி.எல்,கோப்பை வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. கப்டன் பதவியில் இருந்து சச்சின் விலகியது ரசிகர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கும். இருப்பினும், சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட அவரது முடிவுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் நம் நாட்டு முதன்மை பந்து வீச்சாளர் மலிங்க.

# சச்சின் எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது-மலிங்க



தலைநகரில் சமூக நலப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வரும் நற்பணி மன்றம். தற்போது ஊனமுற்றோர் இல்லத்திற்கு உணவு, இலவச மருத்துவமுகாம், இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதல், விளையாட்டுப்போட்டி என்பனவற்றை நடத்தி வருகின்றது. சேவையில் ஈடுபடும் அமைப்பின் முக்கியஸ்தர்களைப் படத்தில் காணலாம்.



# கயிறிழுப்பும் கழுத்தறுப்பும்

மேல் மாகாண மக்கள் முன்னணி,மேலக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி எனக் காலத்துக்குக் காலம் பெயர்களை மாற்றிக் கொண்ட கட்சிக்குள் இப்போ கயிறிழுப்பும் கழுத் தறுப்பும் உச்ச தாண்டவம் ஆடுவதாக கட்சிக் காக உழைத்த தொண்டர்கள் குமுறுகின்றனர்.

தலைநகர் தமிழர்களின் தனித்துவத்தை நிலைநிறுத்த வந்துள்ளோம் என வீரக்குரல் எழுப்பியவர்கள் இன்று தனித்துவத்தை மறந்து தமக்குள் வில்லங்களை அரங்கேற்றிக் கொண்டு மக்களை மடையர்களாக நினைக்கும் நாடகங் களை நடத்திக் கொண்டிருக்கின்றனர் என இவர்கள் வரிந்து கட்டுகின்றனர்.



அண்ணன் ஒரு திசை தம்பி ஒருதிசை எனப் பிரிந்து நின்று உணர்வோடு செயற்பட வந்தவர் களை உதாசீனம் செய்வதாகவும் இவர்களது உச்சக்கட்டத் தொனி ஒலிக்கிறது.

இவர்களது குற்றச்சாட்டுகளில் நிலை பெற்றிருக்கும் ஜனநாயகம் குறித்த விடயங்கள் கருத்தில் கொள்ளப்படக் கூடியவையாக இருக்கின்றன.

கட்சிக்காக தமது நேரகாலங்களை தொலைத்து அதன் வளர்ச்சிக்காக உழைப்பவர்களை ஓரங் கட்டிவிட்டு சகோதரர்கள் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக உழைத்த தலைமைத்துவத்தின் ஆரம்ப கால நடவடிக்கைகள் அதற்கு சான்று எனவும் அதனையும் பொறுத்துக் கொண்டு எதிர் காலத்திலாவது உழைப்புக்கான இடம் வழங்கப் படும் என நம்பிக்கை கொண்டு செயற்பட்ட

தமக்கு தொடர்ந்தும் முன்னெ டுக்கப்படும் ஜனநாயகமற்ற தலைமைத்துவ நடவடிக்கைகள் அதனை உணர்த்துகின்றன எனவும் அவர்கள் சுட்டிநிற்கும் கருத்துகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய வையாகவுள்ளன..

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இக்கட்சிக்கு வழங்கப்பட்ட வாய்புக்களுக்கு அமைய கொழும் பில் இருவர் போட்டியிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அதிலும் தனது தம்பியை போட்டியிட வைக்கவும் தாம் கண்டியில் போட்டியிடவும் தலைமைத்துவம் முடிவுகளை மேற்கொண்டது.

அவ்வாறே சகோதரர்கள் இருவரும் களம் இறங்கினர். ஆனால் கட்சி தலைவரால் கண்டி யில் வெற்றியைப்பெற முடியமால் போனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நடவடிக்கையை கூட தலைமையின் தேர்தல் வியூகம் என நம்பி தாம் தொடர்ந்தும் ஆதரவளித்து வந்ததாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.



தாம் இவ்வாறு ஆதரவளித்த போதும் கொழும்பில் வெற்றி பெற்ற தலைமைத்துவத்தின் சகோதரர் திடீர் என தற்போதைய அரசுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை மேற் கொண்டு கட்சிக்குள் முதன் முதலாக பிளவு உருவாக காரணகர்த்தவாக இருந்தார். தலைமைத்துவம் நம்பிய தம்பியே கழுத்தறுப்பை செய்தபோதும் கட்சித் தொண்டர்கள் உண்மையின் பக்கம் நின்று செயற்பட்டனர் என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் இக்கட்சி தனித்தப் போட்டியிட முன்வந்தது இதனை ஒரு சிறந்த முடிவாகக் கருதி கட்சித் தொண்டர்கள் பலர் களம் இறங்கினர்.

கட்சியின் செல்வாக்கை தக்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் தலைவரும் தேர்தலில்போட்டியிட முன்வந்தார். தேர்தலில் பெற்றுக் கொண்ட பெறுபேறுகளுக்கு ஏற்ப தலைவரும் உறுப்பினராகும் வாய்ப்பைப் பெற்றார். தேர்தலில் வெற்றிபெற்றாலும் கட்டாயம் பதவியை இராஜினாமா செய்து மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்த அவர், கூறியவாறே இராஜினாமாச் செய்தார்.

இருந்தபோதும் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போன்றே அவரது நடவடிக்கை அமைந்து விட்டது.

அதாவது, இராஜினாமா செய்த அந்த பதவிக்கான நியமனத்தை வழங்குவதில் கயிறிழுப்பு நிகழ்ந்தது. ஜனநாயக நெறிமுறைக்கு அப்பால் தமக்கு வேண்டிய ஒருவருக்கு(சிங்களப்பெண்) 'வழங் கியதன் மூலம் கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்ட, உணர்வு கொண்டு உழைத்த தொண்டர்களினதும் ஆதரவளித்த மக்களின் எதிர்பார்ப்புகளிலும் மண் அள்ளிப் போடப்பட்டுள்ளது என இவர்கள் பொங்கி எழுகின்றனர்.

அதற்கும் மேலாக ஜனநாயகமே ஆற்ற ஒரு கட்சிக்கு எதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி எனப்பெயர் வேண்டும் எனவும் கேட்கின்றனர் வாசகர்களே இவர்களது கேள்வி நியாயமானதா?

## அடுத்த இதழில்

**'பாம்பாட்டி பதில்கள்'**

வெளிவருகிறது. உங்கள் கேள்விகளை அனுப்பலாம். சிறந்த கேள்விகளுக்கு காத்திருக்கிறது பணப்பரிசு



# புதிய திரைப் படத்துக்காக ஆழ்கடலில் பயணம் செய்த இயக்குநர் ஜேம்ஸ் கெமரூன்



ஹாலிவுட்டில் டெர்மினேட்டர், டைட்டானிக், அவதார் போன்ற வெற்றிப்படங்களை உருவாக்கி ஓஸ்கர் விருதுகளை பெற்றவர் ஜேம்ஸ் கெமரூன்.

தன்னுடைய புதிய 3D படத்திற்காக ஜப்பானுக்கு அருகில் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்திருக்கும் Marizana Trench என்ற கடல்பகுதியில் கடந்த மார்ச் 25ஆம் திகதி ஆழ்கடல் பயணம் செய்து வெற்றிகரமாக திரும்பியுள்ளார்.

Marizana Trench: இக்கடல் பரப்பு சுமார் 11,035 மீற்றர் (6 மைல்கள்) ஆழமுடையது. எவரெஸ்ட் சிகரத்தை இங்கு முழுதாக மூழ்கடித்து விடும் அளவுக்கு ஆழம் மிகுந்தது.

இதற்குமுன்பு, கடந்த 1960ஆம் ஆண்டு Jaques Piccard, Don Walsh எனும் இரு ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே Marizana Trench இன் அடித்தட்டு பகுதி வரை வெற்றிகரமாக சென்று வந்துள்ளனர் குறிப்பிடத்தக்கது இந்நிலையில் மூன்றாவது நபராக ஜேம்ஸ் கெமரூன் பயணம் செய்து வந்துள்ளார். இதுகுறித்து கெமரூன் அளித்த பேட்டியில், இது முற்றிலும் ஒரு வேற்றுக்கிரக அனுபவம், நாம் கனவு காண்பது போன்று மிக பாரிய கடல் வாழ் உயிரினங்களின் வாழ்க்கை சுழற்சி இங்கு நடைபெறுவதாக எனக்குத் தென்படவில்லை.

இந்த ஆழமான கடல் பரப்பில் நான் பார்வையுற்ற சிலவகை மீன்கள், திமிங்கலத்திற்கு கண்கள் இருப்பதாக தெரியவில்லை. பெரும்பாலான மீன்கள் தூய வெள்ளை நிறத்தில் இருந்தன.

ஆனால் அவற்றை முன்னர் பார்த்ததில்லை. அவை இந்த அபூர்வமான சூழலை தழுவி வாழ்கின்றன. சூரிய வெளிச்சமோ, வெப்பமோ இந்த ஆழ் கடலுக்குள் ஊடுருவவில்லை. காரிருளும் கடும் குளிரும் எங்கும் சூழ்ந்திருந்தது என்று தன் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். இந்த பயணம் ஒரு தொடக்கம் மட்டுமே என கூறும் கெமரூன், கடல் கோள் அனர்த்தங்கள் ஏன் ஏற்படுகின்றன என்பது முதலில் பூமியின் மையப்புள்ளி வரையிலான பல ஆய்வுகளுக்கு இப்பயணம் நிச்சயம் பல பாதைகளை திறந்துவிடும் என்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒத்தக்குதிரை

ஒரு தனியார் தொலைக்காட்சி உண்மை என்ற பெயரில் நடந்தது நடந்தபடி, உண்மையை வெளியுலகத்துக்கு காட்டும் நிகழ்ச்சி ஒன்றை தயாரிக்க முடிவு செய்தது. இதற்காக ஒரு இளைஞர்கள் குழு, ஒத்தக்குதிரை என்ற கிராமத்துக்கு செல்கிறார்கள். அங்கு அதிர்ச்சிட்டும் பல திடுக்கிடும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதை அவர்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வர முயற்சிக்கும்போது, ஒருவர் பின் ஒருவராக கொலை செய்யப்படுகிறார்கள். முகம் தெரியாத அந்த மர்ம கொலையாளி யார்? என்பதை கருவாக வைத்து, ஒத்தக்குதிரை படம் தயாராகிறது.புதுமுகங்கள் திரு-அனுகிருஷ்ணா ஆகிய இருவரும் கதாநாயகன்-கதாநாயகியாக அறிமுகமாக, சந்தானபாரதி, காதல் சரவணன் முக்கிய வேடங்களில் நடித்து இருக்கிறார்கள். ஒளிப்பதிவு: அகர், இசை: எஸ்.என்.அருணகிரி.

கதை-திரைக்கதையை திரு எழுத, சக்திவேலன் வசனம் எழுதியிருக்கிறார். ஜே.சீனிவாசன் டைரக்டு செய்துள்ளார். இவர் பாக்யராஜ், கவிகாளிதாஸ் ஆகிய டைரக்டர்களிடம் உதவி டைரக்டராக பணிபுரிந்தவர். ரத்தத்தை உறைய வைக்கும் இந்த திகில் படத்தை ஓம் மீடியாஸ் தயாரிக்கிறது.

சந்தன வீரப்பன் உலவிய அந்திர், பர்கூர் மற்றும் மைசூர் காடுகளில், படம் 30 நாட்களில் வளர்ந்து இருக்கிறது.



# சுருதிஹாசன் – ஹன்சிகாவுடன் சித்தார்த் நடித்த ஸ்ரீதர்

ஓ மை பிரண்ட் என்ற தெலுங்கு படம், ஸ்ரீதர் என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. இந்த படத்தில் சித்தார்த், சுருதிஹாசன், ஹன்சிகா, லட்சுமி ராமகிருஷ்ணா, பரணி ஆகியோர் நடித்துள்ளனர். இது, ஒரு முக்கோண காதல் கதை. சித்தார்த், சுருதிஹாசன், ஹன்சிகா ஆகிய மூன்று பேருக்கும் இடையேயான காதலை கதை சித்தரிக்கிறது. கதை-திரைக்கதை எழுதி டைரக்ட் செய்திருப்பவர், வி.ஸ்ரீராம். வசனத்தை எம்.ரவிக்குமார் எழுதியுள்ளார். இசை: ராகுல் ராஜ்.ஐதராபாத் மற்றும் சுவிட்சர்லாந்தில் வளர்ந்துள்ள இந்த படத்தை தேவி ஸ்ரீதேவி சதிஷ் தயாரிக்கிறார். காதலா, நட்பா? எது சிறந்தது? என்பதை கருவாக கொண்ட படம் இது.







# வாட்டியெடுக்கும் வெய்யில்

ஸ்கொட்லாந்தில் 47 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான வெயிலால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அபெர்டீன்ஷயரில் உள்ள ஃபைவ் கேஸலில் (Fyvie Castle in Aberdeenshire) அதிகபட்ச வெப்பமாகப் 22.8 டிகரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. இதற்கு முன்பு 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அதிகபட்சமாக 22.2 டிகிரி செல்சியஸ் வெயில் இருந்தது. அதை விட அதிக பட்சமாக இந்த வருட வெயில் ஸ்கொட்லாந்தை மிகவும் சிரமப்படுத்தியுள்ளது.

மற்ற நாடுகளில் இந்த அளவிற்கு அதிகபடியான வெப்பம் பதிவாகவில்லை. காற்று மண்டல ஆய்வு மையமான கிளேர் ஆஸ்டினில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்த ஆண்டின் வெப்பம் அதிகரித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் உயர் அழுத்தமும் காணப்படுகிறது. சிறிய அளவில் மேகங்கள் காணப்படுவதால் இரவில் குளிர்ச்சி நிலவுகின்றது.

ஆசிய நாடுகளை மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகளையும் கோடை வெய்யில் வாட்டி வருகிறது பிரிட்டன் முழுவதும் கடுமையான வெய்யில் தாக்கம் இருப்பதனால் பெருவாரியான மக்கள் கடற்கரைகளை நோக்கி படை எடுக்க ஆரம்பித்துள்ளனர்.. ஐரோப்பாவின் தென்பகுதியில் உள்ள பார்சிலோனா, நைஸ், மஜோர்கர், போர்ச்சுக்கல்லில் உள்ள பாரோ (Barcelona, Nice, Majorca and Faro in Portugal) ஆகிய பகுதிகளை காட்டிலும் பிரிட்டனில் மட்டும் தற்போது 20 டிகிரி வெப்பம் பதிவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்

தேன் கொடுக்கும்
தேனீயை கூட தீர்த்து
கட்டும் மனமிது

பால் கொடுக்கும் பசுவை கூட
பசி தீர்க்கும் உலகிது

தங்கத்திலும் தரம்
குறைக்கும் தரணிதான் இது

தாயைக் கூட தள்ளி வைக்கும்
பாசமிது

காசுக்குதான் நீதி சொல்லும்
கோர்டி இது

கேடு கெட்ட உலகத்திலே
வாழ்வதற்கு வாங்கி வந்த வேசமிது

வேடிக்கைதான நினைக்கையிலே
மனம் தினம் தினம் வருந்து

ந. தமிழ்ச்செல்வன்



காதலர்கள் ஏன்
எப்பவும் பொய்
சொல்றாங்க?
அவங்க மெய் மறந்து
காதலிக்கிறவங்களாச்சே



ஆக்கம்
எம் சர்மிலா (நேர்வே)

மூட்டை போடும் ஆனா
குஞ்சு பொரிக்காத இனம் எது?
வாத்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# லண்டனில் ரஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










ஆக்கம்

எம் சர்மிலா (நேர்வே)








# துப்பாக்கி படத்தில் நடிக்கும் ஏ.ஆர்.முருகதாஸ்




விஜய் நடிக்கும் துப்பாக்கி படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு தொடங்குகிறது.

தமிழ் திரையுலகில் தொடர்ந்து மூன்று வெற்றிப்படங்களைத் தந்த விஜய்யின் அடுத்தபடம் துப்பாக்கி.

ஆக்சன் படமாக வளர்ந்துவரும் இந்தப்படத்தை வெற்றி இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கி வருகிறார். விஜய் மற்றும் ஏ.ஆர்.முருகதாஸ் கூட்டணி இணைந்திருக்கும் முதல் படம் என்பதால் இந்தப் படத்துக்கு இப்போதே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இதனிடையே ஏ.ஆர்.முருகதாஸ் கூறுகையில்,

துப்பாக்கி படத்துக்கு மொத்தம் 5 பாடல்கள் என்றும் படத்தின் தீம் மியூசிக் ஓரிரு வாரங்களில் தயாராகிவிடும் என்றும் தெரிவித்துள்ளார். இந்தப்படத்தில் விஜய் கேட்டுக்கொண்டதன்படி சிறிய வேடத்தில் நடித்துள்ளேன். மேலும் அடுத்த கட்ட படப்பிடிப்பு தொடங்குகிறது என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னல் துடைப்பாயா

சுதந்திரக்காற்றை சுவாசிப்பாயா
சங்கடம் என்று சரிந்து கிடப்பாயா
முள்வேலி கண்டு முடங்கி விடுவாயா
முள்ளும் பசுமையென எழுந்து
நடப்பாயா

கயவர்களைக் கண்டு களைத்து
விடுவாயா
காரணம் கேட்டு காலம் வெல்வாயா
மாயவன் சூழ்ச்சியில்
மயங்கிவிடுவாயா
மதிகொண்டு பதிலடி நீ கொடுப்பாயா

ஏமாற்றம் கண்டு ஏங்கிவிடுவாயா
உனை மாற்றி கொண்டு உலகம்
வெல்வாயா
பாமரன் என்று பாதம் கிடப்பாயா
தன்மானம் கொண்டு தலை
நிமிர்வாயா
ஏனியாய் இருந்து கூனி ஓடிவாயா
ஏணியில் நீ நடந்து இமயம்
தொடுவாயா
பொய்யான புலமைக்கு புகழ்
சூட்டுவாயா
ஒரு புதுமை கவிதனை நீ
படைப்பாயா

தமிழா வீரம் உயிர் கொள்வாயா
தரணியில் உரிமை நீ வெல்வாயா
இருதயம் உறுதிபூண்டு இன்னல்
துடைப்பாயா
மறத்தமிழன் என்று மகிழ்ச்சி
தருவாயா

தங்கையா மாரிமுத்து,
பதுளை.



# சில்லுன்னு ஒரு காதல் கிருஷ்ணா இயக்கும் நெடுஞ்சாலை

சூர்யா-ஜோதிகா நடித்த சில்லுன்னு ஒரு காதல் படத்தை டைரக்ட் செய்தவர், கிருஷ்ணா. இவர் இயக்கிய ஏன் இப்படி மயக்கினாய் படம் விரைவில் திரைக்கு வர இருக்கிறது. இதையடுத்து கிருஷ்ணா இயக்கும் புதிய படம், நெடுஞ்சாலை.

இந்த படத்தில், ஆரி கதா நாயகனாக நடிக்கிறார். கதா நாயகியாக ஷிவதா நடிக்கிறார். இவர் பாசில் இயக்கிய லிவிங் டுகெதர் என்ற மலையாள படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர். முக்கிய வில்லனாக பிரஷாந்த் நாராயண் என்ற மும்பை வில்லன் நடிகர் நடிக்கிறார்.

இவர்களுடன் தம்பி ராமையா, வி.டி.வி.கணேஷ், பாய்ஸ் மணிகண்டன், அஸ்வின், மற்றும் பலரும் நடிக்கிறார்கள். ராஜவேல் ஒளிவீரன் ஒளிப்பதிவு செய்ய, சத்யா சி. இசையமைக்கிறார். கதை, திரைக கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார், கிருஷ்ணா. படத்தை பற்றி டைரக்டர் கிருஷ்ணா கூறியதாவது:-

1985ஆம் ஆண்டில் நெடுஞ்சாலை ஒன்றில் நடைபெற்ற உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து, அதில் காதல்-சண்டை காட்சிகள் இரண்டையும் சமவிகிதத்தில் கலந்து படமாக்கி வருகிறேன்.

சேலம், தர்மபுரி, மைசூர், பெங்களூர், டெல்லி மற்றும் சென்னை நெடுஞ்சாலைகளில், அந்த நெடுஞ்சாலை சம்பவத்தை படமாக்க திட்டமிட்டு இருக்கிறேன்.

---


# குமரவேலன் டைரக்‌ஷனில், ரிதாஸ் தந்தை-மகன் உறவை சித்தரிக்கும் படம்

கல்யாண ராமன், மகராசன், ராணி தேனீ உள்பட பல படங்களை டைரக்டு செய்தவர், ஜி.என்.ரங்கராஜன். இவருடைய மகன் ஜி.என்.ஆர்.குமரவேலன், நினைத்தாலே இனிக்கும், யுவன் யுவதி ஆகிய 2 படங்களை டைரகட் செய்திருக்கிறார்.

அடுத்து இவர், ரிதாஸ் என்ற படத்தை டைரகட் செய்கிறார்.இந்த படத்தில் கிஷோர், சினேகாவுடன், சூரி, பிருதிவிராஜ்தாஸ் என்ற 7 வயது சிறுவன் ஆகிய இருவரும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். படத்தை பற்றி டைரக்டர் ஜி.என்.ஆர்.குமரவேலன் கூறுகிறார்:-இதற்கு முன் நான் இயக்கிய இரண்டு படங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட படம் இது. ஒரு தந்தைக்கும், மகனுக்குமான உறவை சொல்லும் கதை. மகன் பார்வையில் கதை சொல்லப்படுகிறது. படத்தில் பாடல்கள் உண்டு. ஆனால், டூயட் கிடையாது.ரத்னவேல் ஒளிப்பதிவு செய்கிறார். விஜய் ஆன்டனி இசையமைக்கிறார். ஏ.ஆர்.வெங்கடேஷ் வசனம் எழுதியிருக்கிறார். டாக்டர் வி.ராம் புரொடக்‌ஷன் கம்பைன்ஸ் சார்பில் டாக்டர் ராம்தாஸ் தயாரிக்கிறார். சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் படப்பிடிப்பு நடந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு கதை
## இருவர் பார்வையில்

ஒரு கலைஞன் தான் பார்த்து கேட்டு அனுபவித்த விடயங்களை தனக்கு கை வந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்தும் போது அது கலையாகின்றது. கலைஞர்களுக்கிடையே வெளிப்படுத்தும் முறையிலும் கையாளும் உத்திகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது அவர்களது அனுபவத்தினாலும் பயிற்சியினாலும் சூழலினாலும் வேறுபடுகின்றது. ஒரு கலைப்படைப்பில் சமூகத்திலுள்ள பிரச்சினைகளும் அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளும் கூறப்படும் போது அதன் பெறுமதி இன்னும் அதிகரிக்கின்றது. கலையாக்கங்களில் சமூகத்தின் நிலைமைகளை பிரதிபலிப்போரில் பழைய கதைகளுக்கு புதிய வியாக்கியானங்களையும் புதிய கருத்தேற்றங்களையும் செய்வோரும் உள்ளனர். இது முழுவதாகவோ அல்லது அதே கதையமைப்புடன் சிறு மாற்றத்தினை மேற்கொள்ளும் முறைமையுடையதாகவோ அமைந்து காணப்படும். இராமாயணம் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய பல விடயங்களை உள்ளடக்கி யுள்ளது. இதனால்தான் பல இராமாயணங்கள் (கம்பர்,வால்மீகி, வசிட்டர், போதாயினர், துளசி, சம்பூர்ணர்,(.இராமாயணங்கள்) உருவாயின. இராமாயணம் சமூகத்திற்கான பல்வேறுபட்ட கருத்துக்களை முன் வைக்கின்றது. அந்தவகையில் இராமாயணக் கதையினை அடிப்படையாகக் கொண்டு, 2010ல் இராமாயணத்தைத் தழுவியதான கதையமைப்புடன் மணிரத்தினத்தின் இராவணணனும் (சினிமா) இராமாயணத்தின் யுத்த காண்டத்தை அடிப்படையாகக் கொண்டு மௌனகுருவின் இராவணேசனும்(நாடகம்) படைத்தளிக்கப்பட்டுள்ளன.

இராமாயணக் கருவானது இரண்டு கலைஞர்களால் இருவேறு ஊடகங்களினால் (சினிமா, நாடகம்) கையாளப்படும் விதம், காட்சிப்படுத்தும் தன்மை, அதன் கருத்தியல், அதன் கலைப் பெறுமானம், தற்காலத்தின் பிரதிபலிப்பு என்பன இவ் ஆய்வுக் கட்டுரையில் ஆராயப்படுகின்றது.





### ராவணா கதையமைப்பு

ஏற்கனவே சத்தியவான் சாவித்திரி கதையினை அடிப்படையாகக் கொண்டு ரோஜா எனும் திரைப்படமும் மகாபாரதக் கதையினை அடிப படையாகக் கொண்டு தளபதி திரைப்படமும் எடுத்திருக்கும் மணிரத்தினம் இம்முறை இராமாயணக் கதைக்கு புது வியாக்கியானத்தைக் கொடுத்திருக்கி றார். சந்தண மரக்கடத்தல் வீரப்பன் கதையும் இரா வணன் கதையும் இணைந்ததாக இங்கு ராவணா திரைப்படம் உருவாக்கப்படுள்ளது.

பழங்குடி மக்களின் நாயகனாகத் திகழ்பவன் வீரா பொலிஸுக்கும் மேட்டுக் குடியினருக்கும் அவன் தீவிரவாதி. ஆனால் அங்கிருக்கும் மக்களுக்கோ அவன் காவல் தெய்வம். அவனது தங்கைக்கு திருமணம் நடக்கும் போது அதிரடிப் படை அந்த இடத்தில் நுழைந்து அவனைத் தீர்த்துக் கட்டப்பார்க்கிறது. வீரா சூட்டுக்காயத்துடன் தப்பிக் கின்றான். இந்த ஏமாற்றத்தினால் வீராவின் தங்கை வெண்ணிலாவை (சூர்ப்பனகை) தூக்கிப் போகும் அதிரடிப்படையினர் அவளைச் சின்னாபின் னமாக்கின் றனர். வீடு திரும்பும் அவள் வீராவிடம் சகலதையும் கூறிவிட்டு தற்கொலை செய்து கொள்கிறாள். இந்த கோபத்தில் பொலிஸ் அதிகாரி தேவ்வைப்(இராமன்) பழி வாங்க அவன் மனைவி ராகினியை(சீதை) கடத்திச் செல்கிறான் வீரா.

இதனால் கடத்தப்பட்ட மனைவியை மீட்கவும் வீராவைப் பழிவாங்கவும் பொலிஸ் அதிகாரி தேவ் பெரும் படையுடன் காட்டுக்குச் செல்கிறான். காட்டில் ஆரம்பத்தில் வீராவை வெறுக்கும் ராகினி, அவன் தங்கைக்கு நேர்ந்த கொடுமையினை அறிந்து மனமாற்றம் அடைகின்றாள். இச்சந்தர்ப்பத்தில் வீராவிற்கு ராகினி மீது காதல் ஏற்பட அதை அவளிடம் வெளிப்படுத்தியபோதும் அவள் எதுவும் சொல்லாமல் அமைதி காக்கிறாள்.

இந்நிலையில் பொலிஸ் படையானது காட்டை நெருங்கிக் கொண்டு வருகிறது. ஒரு கட்டத்தில் வீராவின் தம்பி சக்கரையை (விபீசணன்) தேவ் சுட்டுக் கொல்கிறான். இதைத் தொடர்ந்து கடும் சண்டை நடைபெறுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ராகினியின் கணவன் தேவ்வினது உயிர் வீராவின் கையில் ஊசலாடுகிறது. இறுதியில் அவனைக் கொல்லாமல் விடுவதோடு ராகினியையும் அவனுடன் அனுப்பி விடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பை தேவ் சந்தேகப்படுகிறான். இதனால் கோபமடையும் ராகினி மீண்டும் வீராவிடமே திரும்புகிறாள். ராகினிக்குப் பின்னால் வரும் படையானது இறுதியில் வீராவைத் தீர்த்துக்கட்டிவிடுகிறது.

இராவணேசன் கதைக் கட்டமைப்பு

பேரா. சி.மௌனகுருவினால் உருவாக்கி நெறியாள்கை செய்யப்பட்ட இராவணேசன் கூத்துருவ நாடகமானது கூத்தின் அழகியலை பிரதானமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாக காணப்படுகின்றது. இவ் இராவணேசன் கதையமைப்பினை எடுத்து நோக்குவோமானால் ஆரம்பத்தில் இராவணன் கொலுவுடன் ஆரம்பிக்கும் நாடகம் அங்கதன் தூது வந்தவுடன் முரண் நிலைக்குச் செல்கின்றது. இதிலிருந்து படிப்படியாக யுத்தத்திற்கான நடிவடிக்கைகள் ஆரம்பமாகின்றன. இந்நாடகக் கட்டமைப்பினை பின்வருமாறு சுருக்கமாக நோக்க முடியும்.

1. இராவணன் கொலுவருதல். 2 அங்கதன் தூது வந்து திரும்புதல் 3. மண்டோதரி வருகை4. மண்டோதரியை இராவணன் சந்தித்தல் 5. இராமர் சேனை படையினைத் தயார் படுத்தல் 6. இராம, இராவண யுத்தம் 7. இராவணன் நிரயாயுத பாணியாதல் 8. இராவணன், மண்டோதரி வாதமிடல் 9. கும்ப கர்ணன் வருகையும் இராவணனுடன் உரையாடலும் போருக்குச் செல்தல். 10. இராமன், கும்பகர்ணன் யுத்தம் கும்பகர்ணன் வீழ்தல் 11. இராவணனின் பல்வேறு படைகளும் தோற்றுப்போதல் 12. இந்திரஜித் வருகை 13. இராவணன், இந்திரஜித் உரையாடல் 14. இந்திரஜித், இலக்குவன் யத்தம் 15. இந்திரஜித் திரும்பி வரலும் இராவணனுடன் உரையாடலும் 16. இராவணன், மண்டோதரி, இந்திரஜித் உரையாடல் 17.இந்திரஜித், இலக்குவன் யுத்தம் - இந்திரஜித் அம்பு பட்டு வீழ்தல் 18.இராவணன், மண்டோதரி உரையாடல்19.இறுதி யுத்தம் - இராவணன் வீழ்தல் 20.மண்டோதரி புலம்பல

இரு கலைஞர்களும் இராமாயணத்தைக் கையாண்டுள்ள .விதம்

ராவணா

ராவணா இராமாயணத் தழுவலாகவும் இராவணேசன் நேரடியாக இராமாயண யுத்த காண்டத்தைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது. ராவணா தாழ்த்தப்பட்ட மக்களுக்கான குரலாக அமைந்து காணப்படுகின்றது. மேட்டுக் குடியினரால் பிரயோகிக்கப்படும் அதிகாரத் துஸ்பிரயோகங்கள். குறிப்பிட்ட மக்களை கீழ்மட்ட நிலையில் மதிப்பிடுதல் இதனால் அச்சமூகம் ஒரு கட்டத்திற்கு மேல் அதிகாரத்தை, மேட்டுக் குடியினைரை எதிர்க்கத் துணிதல். இந்த இடத்தில் வீரப்பனது பாத்திரம் இன்னொரு நியாயப்பாட்டில் பார்ப்பது போன்று அமைந்துள்ளது. இவ்விடங்களை நேரடியாகக் கூறாமல் இராமாயணச் சாயத்துடன் தந்திருப்பது இராமாயணத்தை ஒரு வகையில் மீள் வாசிப்புச் செய்வதாக அமைந்துள்ளதோடு வீரப்பன், இராவணனது ஒன்றித்த தன்மைகளும் (இதனால் தான் வீரப்பனில் முதல் எழுத்தையும் ராவணனில் முதல் எழுத்தையும் சேர்த்து வீரா எனும் பெயரை மணிரத்தினம் உருவாக்கினாரோ?) அப்பாத்திரங்களுக்கான அவர்கள் பக்க நியாயப்பாடும் இங்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் ராவணாவில் இராமாயணத்துடன் இணைக்கும் பல்வேறு இடங்கள், வார்தைகள் ஆங்காங்கே வந்து செல்கின்றன.



இராவணேசன்.

இராவணேசனைப் பார்க்கும் போதுஇ பல்வேறு தளங்களில் பல்வேறு காலப் பகுதிகளில் இவ் இராவணேசன் அக்காலத்தின் குரலாக பல விடயங்கள் பற்றிப் பேசியிருப்பதனைக் காணமுடிகின்றது. குறிப்பாக யுத்தத்தினால் வரும் அழிவுபற்றி அழுத்திக் கூறப்பட்டுள்ளதோடு அதில் மக்களின் அவலம், பெண்களின் நிலை என்பன பற்றி இராவணேசன் - 2010 பேசுகின்றது. இராவணேசனில் வரும் பாத்திரங்கள் சமூகத்தின் வகை மாதிரிகளாக சித்தரிக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது.

யுத்தம் செய்வதற்கான நிர்ப்பந்தங்கள்.

(31ஆம் பக்கம் பார்க்க)



### மேடம்

எல்லாவற்றிலுமே சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகும்.சிறுசிறு வெற்றிகளையும் இலாபங்களையும் தேடிக் கொள்ள முடியும். ஆனால் எல்லாமே காலதாமதமாகத் தான் கிட்டும். பெற்றோர் வகையில் சற்று அதிகமாக மருத்துவச் செலவு ஏற்படும். குடும்பத்தில் சிறு சிறு பூசல்கள் தோன்றும்.

### இடபம்

சொந்த இடத்தில் இருந்து கொண்டு தனிக்காட்டு ராஜாபோல செயல்பட இருக்கின்றீர்கள்.குடும்பத்தில் சிறுசிறு பூசல்கள் தலை தூக்கினாலும் பெரிய பாதிப்பு ஏற்படாது. சுபச்செலவு ஏற்படும். குடும்பத்தில் பொதுவாக உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்திருக்கும் தம்பதியர் மீண்டும் ஒன்று சேர்ந்து வாழ்வார்கள்

### மிதுனம்

கணவன் அல்லது மனைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். வேலை காரணமாகச் சில மாதங்கள் பிரிந்திருக்க நேரிடலாம்.திருமண வயதில் உள்ள ஆண்கள் அல்லது பெண்களுக்குத் திருமணம் நிச்சயமாவதில் தாமதம் ஏற்படலாம் வருமானம் மிகவும் சிறப்பாக இருக்கும். நேர்மையாகவும் உழைத்துப் பெரும் புகழ் பெறுவார்கள். பலராலும் பாராட்டப்படுவார்கள்

### கடகம்

உங்களுடைய பொருளாதார நிலையில் முன்னேற்றமான போக்கு காணப்படும். பணத்தை நீங்கள் தேடிச் செல்ல வேண்டியதில்லை.. பணம் உங்களைத் தேடி வரும். எல்லாவகையான செலவுகளையும் எளிதாகச் சமாளிப்பீர்கள். இழுத்துக் கொண்டே சென்ற வேலைகளை எளிதாகச் செய்ய முடியும். எதிர்பாராத இடங்களிலிருந்து நல்ல உதவிகள் கிடைக்கும்.

### சிம்மம்

கடமைகளையும் காரியங்களையும் சிறப்பாக நிறைவேற்றி உங்கள் முக்கியத்துவத்தை உணரச் செய்வீர்கள்.இப்படித்தான் இருக்கும். அப்படித்தான் இருக்கும் என்று ஊகமாகச் சிந்தித்து மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்க மாட்டீர்கள். மனதில் எப்போதும் நம்பிக்கை நிறைந்திருக்கும்

### கன்னி

சிரமங்கள் ஏற்படலாம். முன்னேற்றத்திற்கான வழி கிடைக்கும். அதுவரை பொறுமை தேவை.எதிர்பார்க்கும் ஆதாயமும் வந்து சேரும். ஆனால் முழுமையாக வராது. அரை குறையாக வந்து சேரும். புத்துணர்ச்சி அதிகரிக்கும். சுறுசுறுப்பாக செயல்பட வைக்கும். ஒரு இடத்தில் நிலையாக இருக்க முடியாது. அவ்வப்பொழுது செயல்படும் காரியங்களில் தடையும் தாமதமும் வந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துலாம்

ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டால் அதை உடனே செய்து முடிக்க வேண்டும் என்று தோன்றாது.நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால் அடிக்கடி நோய்கள் ஓடி வந்து உறவு கொண்டாடும். தைரிய உணர்ச்சி குன்றுவதால் எதிர்த்து நிற்க வேண்டிய நேரத்தில்கூடப் பணிந்து சென்று விடுவீர்கள். உந்து சக்தி குறைவதால் உங்களுடைய செயல்பாடுகளில் வேகம் இருக்காது.

### விருட்சிகம்

சற்று நிதானத்துடன் செயல்பட்டு பலரும் பாராட்டும் அளவிற்கு செல்வாக்கை உயர்த்திக் கொள்வீர்கள். சிலருக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிட்டும். சிறந்த மனிதர் என்ற பாராட்டும் கிட்டும்.

### தனுசு

உங்களுடைய உற்சாகமான பேச்சு பல நல்ல நண்பர்களைத் தேடிக் கொடுக்கும். முக்கியமாக தொழில், வேலைவாய்ப்புகளில் ஈடுபாடுகள் அதிகரிக்கும்.நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். உங்களுடைய திட்டங்கள் நிறைவேறி நிறைய ஆதாயங்கள் கிட்டும்.

### மகரம்

ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். இலாபம் பார்ப்பது குதிரைக் கொம்பாக இருக்கும்.பொதுவாக நீங்கள் எந்த வேலையைத் தொடங்கினாலும் அதில் தடங்கல் ஏற்படும். அதனால் சிறு வேலையாக இருந்தாலும்கூட அதைத் தொடங்கியதும் வேகமாகச் செய்து முடித்து விட முடியாது.

### கும்பம்

வாழ்க்கை துணைவர், நண்பர்கள் வகையில் சிறு கருத்து வேறுபாடுகள் உருவாக வாய்ப்புள்ளது.உங்கள் செலவுகளைச் சமாளிக்கும அளவுக்கு வருமானம் வந்து விடும். இம்மாதத்தைப் பொறுத்த வரை எவ்வளவு சிரமங்கள் வந்தாலும் அதை சாமர்த்தியமாக எதிர்கொள்ளும் வாய்ப்பும் சூழ்நிலையும் உருவாகும்

### மீனம்

குடும்பத்தில் எப்போதும் சண்டைச் சச்சரவுகளும் கருத்து வேறுபாடுகளும் காணப்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் தடைகளும் தாமதங்களும் ஏற்படும்.தொழில், வியாபாரத்தில் பெரிய முன்னேற்றத்தை எதிர்பார்க்க வேண்டாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது



(28 ஆம் பக்கத் தொடர்ச்சி)

* மகனை யுத்தத்தில் தொலைத்து நிற்கும் தாய்

* கணவனை இழந்து துடிக்கும் மனைவ

என எல்லாமே (இராமாயணக் கதையாக இருந்தாலும்) சமகாலப் பிரச்சினையை பேசுவதாக அமைந்து காணப்படுகினறது. பொதுவாக இராமாயணம் இராமனது பெருமை கூறுவதாகவே அமைந்து காணப்படுகிறது. எல்லாக் குவிமையமும் இராமனுக்காக இராமனை ஒரு பெரிய கதாநாயகனாக சித்தரிப்பதையே மையமாகக் கொண்டது. ஆனால் பேராசிரியர் அவர்கள் தனது இராவணேசன் - 2010ல் குறுங்கதையாடலை (Sort conversation) ஆரம்பித்திருப்பதைக் காணமுடியும். பெருங் கதையாடல் அதிகாரத்தை சிருஸ்டிப்பதாகவும் அது ஒரு பக்க நியாயமாகவும் இருக்க இக் குறுங்கதையாடல் பல்பக்க நியாயப்பாடுகளையும் அதிகாரப் பகிர்வினையும் ஏற்படுத்துவதைக் காணலாம். இராவணேசனில் இராவணன், மண்டோதரி, இராமன், கும்பகர்ணன், இந்திரஜித், இலக்குவன் என எல்லாப்பாத்திரங்களுமே அப்பாத்திரங்களுக்குரிய நியாயப் பாட்டுடன் உருவாக்கப்பட்டிருப்பதும் அப்பாத்திரங்களை இக்காலத்தின் குறியீடுகளாகத் தந்திருப்பதும் இதில் சிறப்பம்சமாகும். இங்கு பாத்திரங்களின் தனிக்குணாதிசயங்களினூடே இறுதியில் இராவணனை ஒரு துன்பியல் நாயகனாகச் சித்தரித்திருப்பதும் யுத்தினால் ஏற்படும் மனிதப் பேரவலத்தினை உணர்வு ரீதியாகச் சொல்லியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனவே இரு கலைஞர்களும் சமகாலப் பிரச்சினையைப் பேசுவதற்கான ஊடகமாக இராமாயணத்தைப் பிரயோகித்திருப்பதைக் காணமுடிகின்றது.

காட்சிப்படுத்தும் தன்மை
ராவணேசாவில்...

பேராசிரியர் சி.மௌனகுருவின் இராவணேசனில் காட்சிப்படுத்தலானது காட்சித் தட்டிகளைக் கொண்டு வித்தியாசமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* கோரஸாக

* பிரமாண்ட சாட்சிகளாக

* படைகளாக, படை வியூகங்களாக

* காட்சி மாற்றங்களைக் காட்டுபவைகளாக

* பாத்திரங்களது உணர்வுகளின் குறியீடுகளாக

* பிரச்சினைகளாக

* இடத்தின் பின்னணியாக

என பல கோணங்களில் இக்காட்சித் தட்டிகள் அசைவதனைக் காணமுடிகின்றது.

### முடிவுரை

ராவணா, இராவணேசன் இரு படைப்புக்களுமே 2010ல் இருவேறு கலைஞர்களால் இரு கலை ஊடகங்களினூடாக வெளிப்படுத்தப்பட்டவை. ஆனால் இரண்டுக்குமே இராமாயணம் ஆதாரமாக இருந்திருப்பதைக் காண முடிகின்றது. அதாவது ஏற்கனவே இருந்த கதை ஒன்றிற்கு தற்காலத்தின் கதையும் உணர்வும் இருவேறு விதமாகப் பூசப்பட்டிருப்பதையும் அல்லது கருத்தேற்றம் செய்யப்பட்டிருப்பதையும் காணமுடிகின்றது. இந்த தற்காலக் கதையாடலானது சில இடங்களில் சோகம் நிறைந்த படிமங்களாகவும் சில இடங்களில் குறியீட்டுக் காட்சிப்படுத்தலாலும் இரு படைப்புக்களிலும் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம். இது படைப்பாளிகள் தான் சொல்லித்தான் ஆகவேண்டிய வேண்டிய விடயங்களை சொல்வதற்கும் இவ்விடயங்களைச் சொல்வதால் ஏற்படும் சில கஸ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே இப்படைப்புக்கள் எமக்கு கூறி நிற்பது ஏற்கனவே அறியப்பட்ட கதைகளினால் கூட, நாம் நமது இப்போதய வலிகளையும் சோகங்களையும் பேச முடியும் என்பதே.

**எம்.சண்முகதாஸ்**
**விரிவுரையாளர்,**
**நடன நாடகத்துறை, சு.வி.அ.க.நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# Sடைல்

Thamil














Sடைல்

Thamil








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What is ஜீ.எஸ்.பி???

பொதுவாக இன்று ஜி.எஸ்.பி. குறித்து பேசப்படும் போது, அது ஆடை உற்பத்தி செய்யும் நாடுகள் தமது உற்பத்திப் பொருட்களை ஐரோப்பிய நாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் போது, அவற்றிற்கு அந்நாடுகள் இறக்குமதித் தீர்வை விதிக்காது சலுகை வழங்கும் ஒரு நடைமுறையாக மட்டுமே நம்மில் பெரும்பாலோரால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால் அது உண்மையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் மற்றும் குறை அபிவிருத்தி நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் முழுவீச்சுடன் இணைவதற்கு உதவும் ஒரு பரந்துபட்ட வேலைத்திட்டமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.



இந்த பொதுமையாக்கப்பட்ட முன்னுரிமை ஒழுங்குமுறையை (Generalized System of Preference - GSP) ஐரோப்பிய யூனியன் 1995இல் அறிமுகப்படுத்தியது. எனினும் இது புதுப்பிக்கப்பட்டு, பலமுக்கிய, ஜீவாதாரமான நடைமுறைகள் புகுத்தப்பட்டது. 2002ஆம் ஆண்டின் பின்னரே இதற்கு ஆதாரமாயிருந்தது. டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலேயாகும். என்ன இந்த டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்?

உலக வர்த்தக அமைப்பின் (World Trade Organization - WTO) நான்காவது அமைச்சர்கள் மட்ட மாநாடு 2001 நவம்பரில் கட்டார் தலைநகரான டோகாவில் நடைபெற்றது. இதுவே டோகா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் எனப் பிரபலம் பெற்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு விஷேட மற்றும் தனிப்பட்ட அக்கறை என்பது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. அனைத்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளையும் சர்வதேச வர்த்தகத்தில் இணைப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

அபிவிருத்தி என்பதே டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் (Doha Development Agenda - DDA) பிரதான் தொனிப் பொருளாகும். எனவே சர்வதேச வர்த்தக ஒழுங்கமைப்பு வழங்கும் வாய்ப்புக்களின் முழுமையான நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்தி அடைந்து வரும் குறிப்பாக அவற்றுள் மிக வறிய நாடுகளுக்கு உதவுமுகமாகப் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்' என்று டோகா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையடுத்து ஐரோப்பிய யூனியன் வர்த்தக ஆணையாளர் தெரிவித்தார்.

வி.எஸ்.என்

இதன் தொடர்ச்சியாக 1995முதல் ஐரோப்பிய யூனியன் வழங்கி வந்த ஜி.எஸ்.பி வேலைத்திட்டத்தில் இருந்த ஐரோப்பிய சந்தைகளுக்கு இறக்குமதி செய்யும் உற்பத்திப் பொருட்களின் அளவைக் கட்டுப்படுத்தும் முறையை நீக்கி, ஐரோப்பிய சந்தைகளுக்கு உகந்ததான பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வையில் முன்னுரிமை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

அபிவிருத்தி அடைந்துவரும் சில நாடுகள் பின்தள்ளப்பட்ட நிலையில் இருந்தன. வேறு சில நாடுகள் அபிவிருத்தியைப் பலவீனப்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க பிரச்சினைகளைக் கொண்டிருந்தன. இந்நாடுகளின் விஷேட தேவைகளைக் கருதி விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உதாரணமாக இலங்கை இனப் பிரச்சினை, பங்களாதேஷ் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படுவது, தாய்வான் கொங்கொங் போன்ற



நாடுகளில் அதிகளவான போதைப் பொருள் வர்த்தகம் என்றிவ்வாறு.

அதே நேரத்தில் அபிவிருத்தி குறித்த எண்ணக்கருவும் விருத்தியடைந்தது. கடந்த பத்தாண்டுகளில் அபிவிருத்தியை உறுதியாக நிலை நிறுத்தக்கூடிய அம்சங்கள் குறித்துக் கவனம் திருப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மனித உரிமைகளை மதித்தல் ஆகிய முக்கிய இரண்டு விடயங்களினூடு உறுதியான பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியை வளர்த்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஜி.எஸ்.பி வேலைத்திட்டம் பல்லின நாடுகளின் வர்த்தகச் சூழல் ஒழுங்கு முறைகளுக்கேற்ப பொருத்தமாக ஒழுங்கமைப்பதற்காகவும், குறிப்பிட்ட கால இடை வெளியில் ஒழுங்காக இற்றைப்படுத்துவதற்காகவும், பத்தாண்டு காலச் சுற்றுக்கு திட்டமிடப்பட்டது. முதலாவது சுற்று 1995இல் ஆரம்பமாகி 2004இல் முடிவுற்றது. இப்போது நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருப்பது இரண்டாவது சுற்று ஆகும். ஜி.எஸ்.பி.யில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் பின்வருவனவாகும்.

1. பொது ஏற்பாடுகள்.
2. தொழிலாளர் உரிமைப் பாதுகாப்பு விஷேட ஊக்குவிப்பு ஏற்பாடுகள்.
3. சுற்றுச் சூழல் பாதுகாப்பு விஷேட ஊக்குவிப்பு ஏற்பாடுகள்.
4. குறை அபிவிருத்தி நாடுகளுக்கான Least Developed Countries - LDC) விஷேட ஏற்பாடுகள்.
5. போதைப்பொருள் உற்பத்தி மற்றும் வர்த்தகத்திற்கெதிரான நடவடிக்கைகளுக்கான விஷேட ஏற்பாடுகள்.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் 2002ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்தன.

பொது ஏற்பாடுகள் நலன் பெறும் அனைத்து நாடுகளுக்கும் உரித்துடையதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் தீர்வைகளுக்கான பொது உடன்படிக்கைக்கு உட்பட்ட நாடுகள் (GATT), ஜி.எஸ்.பி. முன்னுரிமைகள் எல்லா நாடுகளுக்கும் பொதுமையாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தமையினால் நாடுகள் எந்தவிதமான வகைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்படவில்லை. எனினும் எத்தனை நாடுகளை இணைத்துக் கொள்வது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு ஐ.நா. சபையிடம் விடப்பட்டது.

1960களில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்று கருதப்பட்ட 77 நாடுகள் ஒரு குழுவாக அமைந்து தமக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை வளர்த்து அங்டாட் அமைப்பிலும் (UNCTAD) ஏனைய ஐ.நா. சபை




15 வருஷமா தீராத உங்க வியாதிக்கு ஒரு வழியா மருந்து கண்டு பிடிச்சுட்டேன். ஆனா பேட் லக் எழுதி வெச்ச என்னோட கையெழுத்தை என்னாலேயே படிக்க முடியல!

அமைப்புக்களிலும் தமது இருப்பினை உறுதியாக நிலைநிறுத்த முயன்றன. ஒரு நாட்டினை அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்று கணிப்பதற்கு, இன்று கூட அது 77 நாடுகளின் குழுவின் அங்கத்துவ நாடா என்றே பார்க்கப்படுகின்றது. ஆனால் அத்தகைய நாடுகளின் தொகை இன்று 77 அல்ல. அது ஏறக்குறைய இரண்டு மடங்காகி விட்டது.

சீனா 77 நாடுகளின் உறுப்பு நாடாக இருக்கவில்லை. அது அங்டாட் நாடுகளின் (UNCTAD) தனி ஒரு பிரிவாக இயங்கி வந்தது. எவ்வாறாயினும் சீனாவும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டு அதற்கும் ஜி.எஸ்.பி. நலன்கள் வழங்கப்பட்டன. *(மிகுதி அடுத்த இதழில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









சென்னையில், ஐந்தாவது ஐ.பி.எல், தொடரின் துவக்க விழா வண்ணமயமாக நடந்தது. பொலிவுட் நட்சத்திரங்களின் ஆட்டம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. ஐந்தாவது ஐ.பி.எல்., டுவென்டி-20 தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ்,மும்பை இந்தியன்ஸ், டில்லி டேர்டெவில்ஸ் உட்பட 9 அணிகள் பங்கேற்கின்றன. தொடரின் துவக்க விழா கடந்த சென்னை ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் நடந்தது. நிகழ்ச்சிகள் இரவு 7.30க்கு துவங்கியது.முதன் முதலாக மேடையில் தோன்றிய பொலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன், பிரசூன் ஜோஷி எழுதிய கவிதையை வாசித்தார். பிரபல இசைக்கலைஞர் ரவி, டிரம்ஸ் வாசிப்பில் அரங்கம் அதிரச் செய்தார். கலோனியல் கசின்ஸ் இசைக்குழுவின் சார்பில் பின்னணி பாடகர் ஹரிஹரன், லூயிஸ் சேர்ந்து இந்திப்பாடல் பாடினர்.

பின், டான் என்ற இந்திப்படத்தில் இடம் பெற்ற ஆஜ் கி ராட்... எனத் துவங்கும் பாடலுக்கு நடனமாடிய பிரியங்கா சோப்ரா, முன்னால் அமர்ந்திருந்த வீரர்களை உடன் அழைக்க, ஹர்பஜன் சிங் மட்டும் சென்று கம்பெனி கொடுத்தார். அடுத்து பிரபுதேவாவும் நடனமாடினர். **கப்டன் அணிவகுப்பு:** அடுத்து சென்னை, மும்பை, டில்லி, கோல்கட்டா உட்பட 9 ஐ.பி.எல்., அணிகளின் கப்டன்கள் மைதானத்தில் அணிவகுத்தனர். ஐந்தாவது ஐ.பி.எல்., தொடருக்காக உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

**எப்படி இருக்கீங்க...** சென்னை அணி கப்டன் டோனி, ரசிகர்களைப் பார்த்து, எப்படி இருக்கீங்க... என தமிழில் பேசி அசத்தினார். பின், தமிழ் சினிமா பாடலுக்கு ஏற்ப அஷ்வின், போலிஞ்சர் குத்தாட்டம் போட்டு கலக்கினர். பாலிவுட் நடிகை கரீனா கபூர், வணக்கம் சென்னை, எப்படி இருக்கீங்க... என்று ஆரம்பித்து, இந்திப்பாடலுக்கு நடனமாடினார்.

## IPL அட்டவணை

Date Time Match Detail venue Wed Apr 04 8 PM சென்னை சூப்பர் கிங்ஸ் Vs மும்பை இந்தியன்ஸ் எம்.ஏ.இ சிதம்பரம் மைதானம்

Thu Apr 05 8 PM கொல்கத்தா நைட் ரைடர்ஸ் Vs டில்லி டேர்டெவில்ஸ் ஈடன் கார்டன் மைதானம்

Fri Apr 06 4 PM மும்பை இந்தியன்ஸ் Vs புனே வாரியர்ஸ் வான்கடே மைதானம்

Fri Apr 06 8 PM ராஜஸ்தான் ராயல்ஸ் Vs கிங்ஸ் லெவன் பஞ்சாப் சவாய் மான்சிங் மைதானம்

Sat Apr 07 4 PM பெங்களூரு ராயல் சாலஞ்சர்ஸ் Vs டில்லி டேர்டெவில்ஸ் எம். சின்னசாமி மைதானம்

Sat Apr 07 8 PM டெக்கான் சார்ஜர்ஸ் Vs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை சூப்பர் கிங்ஸ் ஏ.சி.ஏ.இ - வி.டி.சி.ஏ.இ மைதானம்

Sun Apr 08 4 PM ராஜஸ்தான் ராயல்ஸ் Vs கொல்கத்தா நைட் ரைடர்ஸ் சவாய் மான்சிங் மைதானம்

Sun Apr 08 8 PM புனே வாரியர்ஸ் Vs கிங்ஸ் லெவன் பஞ்சாப் சுப்ரதா ராய் சகாரா மைதானம்

Mon Apr 09 8 PM டெக்கான் சார்ஜர்ஸ் Vs மும்பை இந்தியன்ஸ் ஏ.சி.ஏ.இ - வி.டி.சி.ஏ.இ மைதானம்

Tue Apr 10 4 PM பெங்களுர் ராயல் சாலஞ்சர்ஸ் Vs கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எம். சின்னசாமி மைதானம்

Tue Apr 10 8 PM டில்லி டேர்டெவில்ஸ் Vs சென்னை சூப்பர் கிங்ஸ் பெரோஷா கோட்லா மைதானம்

Wed Apr 11 8 PM மும்பை இந்தியன்ஸ் Vs ராஜஸ்தான் ராயல்ஸ் வான்கடே மைதானம்

Thu Apr 12 4 PM சென்னை சூப்பர் கிங்ஸ் Vs பெங்களுர் ராயல் சாலஞ்சர்ஸ் எம்.ஏ.இ சிதம்பரம் மைதானம்

Thu Apr 12 8 PM கிங்ஸ் லெவன் பஞ்சாப் Vs புனே வாரியர்ஸ் பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானம்

Fri Apr 13 8 PM கொல்கத்தா நைட் ரைடர்ஸ் Vs ராஜஸ்தான் ராயல்ஸ் ஈடன் கார்டன் மைதானம்

Sat Apr 14 8 PM புனே வாரியர்ஸ் Vs சென்னை சூப்பர் கிங்ஸ் சுப்ரதா ராய் சகாரா மைதானம்

Sun Apr 15 4 PM கோல்கட்டா நைட் ரைடர்ஸ் Vs கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஈடன் கார்டன் மைதானம்

Sun Apr 15 8 PM பெங்களுர் ராயல் சாலஞ்சர்ஸ் Vs ராஜஸ்தான் ராயல்ஸ் எம். சின்னசாமி மைதானம்

Mon Apr 16 8 PM மும்பை இந்தியன்ஸ் Vs டில்லி டேர்டெவில்ஸ் வான்கடே மைதானம்

Tue Apr 17 4 PM ராஜஸ்தான் ராயல்ஸ் Vs டெக்கான் சார்ஜர்ஸ் சவாய் மான்சிங் மைதானம்

Tue Apr 17 8 PM பெங்களுர் ராயல் சாலஞ்சர்ஸ் Vs புனே வாரியர்ஸ் எம். சின்னசாமி மைதானம்

Wed Apr 18 8 PM கிங்ஸ் லெவன் பஞ்சாப் Vs கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானம்

Thu Apr 19 4 PM டில்லி டேர்டெவில்ஸ் Vs டெக்கான் சார்ஜர்ஸ் பெரோஷா கோட்லா மைதானம்

Thu Apr 19 8 PM சென்னை சூப்பர் கிங்ஸ் Vs புனே வாரியர்ஸ் எம்.ஏ.இ சிதம்பரம் மைதானம்

Fri Apr 20 8 PM கிங்ஸ் லெவன் பஞ்சாப் Vs பெங்களுர் ராயல் சாலஞ்சர்ஸ் பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானம்

Sat Apr 21 4 PM சென்னை சூப்பர் கிங்ஸ் Vs ராஜஸ்தான் ராயல்ஸ் எம்.ஏ.இ சிதம்பரம் மைதானம்

Sat Apr 21 8 PM டில்லி டேர்டெவில்ஸ் Vs புனே வாரியர்ஸ் பெரோஷா கோட்லா மைதானம்

Sun Apr 22 4 PM மும்பை இந்தியன்ஸ் Vs கிங்ஸ் லெவன் பஞ்சாப் வான்கடே மைதானம்

Sun Apr 22 8 PM டெக்கான் சார்ஜர்ஸ் Vs கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பாரபதி மைதானம்

Mon Apr 23 8 PM ராஜஸ்தான் ராயல்ஸ் Vs பெங்களுர் ராயல் சலஞ்சர்ஸ் சவாய் மான்சிங் மைதானம்

Tue Apr 24 4 PM புனே வாரியர்ஸ் ஏள டில்லி டேர்டெவில்ஸ் சுப்ரதா ராய் சகாரா மைதானம்

Tue Apr 24 8 PM கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஏள டெக்கான் சார்ஜர்ஸ் ஈடன் கார்டன் மைதானம்

Wed Apr 25 4 PM கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஏள மும்பை இந்தியன்ஸ் பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானம்

Wed Apr 25 8 PM பெங்களுர் ராயல் சாலஞ்சர்ஸ் ஏள சென்னை சூப்பர் கிங்ஸ் எம். சின்னசாமி மைதானம்

Thu Apr 26 8 PM புனே வாரியர்ஸ் Vs டெக்கான் சார்ஜர்ஸ் சுப்ரதா ராய் சகாரா மைதானம்

Fri Apr 27 8 PM டில்லி டேர்டெவில்ஸ் Vs மும்பை இந்தியன்ஸ் பெரோஷா கோட்லா மைதானம்

Sat Apr 28 4 PM சென்னை சூப்பர் கிங்ஸ் Vs கிங்ஸ் லெவன் பஞ்சாப் எம்.ஏ.இ சிதம்பரம் மைதானம்


Sat Apr 28 8 PM கோல்கட்டா நைட் ரைடர்ஸ் Vs பெங்களுர் ராயல் சாலஞ்சர்ஸ் ஈடன் கார்டன் மைதானம்

Sun Apr 29 4 PM டில்லி டேர்டெவில்ஸ் Vs ராஜஸ்தான் ராயல்ஸ் பெரோஷா கோட்லா மைதானம்

Sun Apr 29 8 PM மும்பை இந்தியன்ஸ் Vs டெக்கான் சார்ஜர்ஸ் வான்கடே மைதானம்

Mon Apr 30 8 PM சென்னை சூப்பர் கிங்ஸ் Vs கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எம்.ஏ.இ சிதம்பரம் மைதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org